# உரைமுரசு



பதிப்பாசிரியர்

முனைவர் பா.அருள்ஜோதி

NCBH

# பொருளடக்கம்


1. தமிழுக்குத் தடம் கண்ட தொல்காப்பியம் 7
   -முனைவர் பொ. மா. பழனிசாமி

2. எட்டுத்தொகை நூல்களில் நிர்வாகத் திறன் 12
   - முனைவர் இரா. விஷ்ணுபிரியா

3. காப்பியங்கள் காட்டும் தனிமனித வாழ்வியல் 21
   - முனைவர் ந. பிரகாஷ்

4. தமிழர்களின் மரபுவழி விழாக்கள் 29
   - முனைவர் ம. சித்ரகலா

5. தமிழ் இலக்கியத்தில் கோயிற்கலை 39
   - பேரா. அ. மகபூபு

6. வேளாண்மையில் மரபும் மாற்றமும் 45
   - முனைவர் இரா. ஜெயந்தி

7. தற்கால இலக்கியங்களில் தலித்தியம் 54
   -முனைவர் பே. மஹேஸ்வரி

8. நவீன ஊடக விளம்பரங்களின் நோக்கும் போக்கும் 60
   - ர. சூர்யா

9. சிறுகதைகள் சித்திரிக்கும் பெண்களின் வாழ்வியல் சிக்கல்கள் 65
   - முனைவர். த. கீதாஞ்சலி

# 9. சிறுகதைகள் சித்திரிக்கும் பெண்களின் வாழ்வியல் சிக்கல்கள்

- முனைவர். த. கீதாஞ்சலி

மனித மனத்தை ஈர்க்கும் சக்தி கதைவடிவத்துக்கு உண்டு. இன்றைய இயந்திர இயக்க வாழ்க்கையில் நீண்ட கதைகளைவிட சிறிய கதைகளே மக்களிடம் முதலிடம் பெறுகின்றன. மக்கள் சமுதாயத்தின் நடப்பியல் சிக்கல்களைச் செப்பனிடும் சக்தி கதைகளுக்கு உண்டு. அவ்வகையில் சிறுகதைகளில் காணப்படும் பெண்களின் வாழ்வியல் சிக்கல்களையும் அவற்றினால் ஏற்படும் விளைவுகளையும் எடுத்துக்காட்டுவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**பெண்கள் நிலை**

இருபதாம் நூற்றாண்டின் தொடக்கம் வரை பெண்கள் மரபின் பெயராலும், மதத்தின் பெயராலும் அடக்கு முறையினைத் தொடர்ந்து அனுபவித்து வந்தனர். குடும்பத்தைச் சிதையாது பாதுகாப்பதற்குப் பெண்களின் பொறுமைப் பண்பே அடிப்படையாக அமைந்தும், பெண்களின் வாழ்வு முழுநிறைவுடன் அமையவில்லை. சமூகக் கட்டுப்பாடுகளும், இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு மேலாக உருவாக்கப்பட்டிருந்த உளவியற் கட்டுகளும், பெண்களின் வலிமையினைச் சுருக்கியிருந்தன. இத்தகைய சூழ்நிலையில் தேசிய எழுச்சியில் பெண்கள் பங்கேற்றனர். 1826ஆம் ஆண்டு இராஜாராம் மோகன்ராய் பெண்களின் நிலையை உயர்த்த, விதவைகள் மறுவாழ்வு, பெண் கல்வி, பால்ய விவாக எதிர்ப்பு, பலதார மணத்தடை ஆகியவற்றிற்குப் பாடுபட்டார். 1829இல் பெண்டிங் பிரபு உடன்கட்டை ஏறும் வழக்கத்தைத் தடை செய்யச் சட்டம் இயற்றினார். பாரதி போன்றவர்கள் கவிதையில் அறை கூவல் விடுக்கவும் பெரும்புரட்சி ஏற்பட்டது. சமூகத்தின் ஏனைய பிரிவினரின் சிக்கலைப் போன்றே பெண்களின் சிக்கலும் எண்ணப்பட்டது. எனவே பெண்ணுரிமை என்பது சமூகத்தின் ஏனைய உரிமைப் போராட்டங்களுடன் இணைந்தே எழுந்தது. காந்திய சிந்தனையே மாற்றத்திற்கு அடிப்படையாக அமைந்தது.

இத்தகைய எழுச்சியும், ஆங்கிலேயர் கொணர்ந்த நிறுவனக் கல்வி முறையும், பெண்களை வெளி உலகிற்குக் கொண்டு வந்தன.

அடிப்படியில் ஒதுங்கிக் கிடந்த பெண்கள் பள்ளிகளிலும், பல்கலைக் கழகங்களிலும் நடமாடத் தொடங்கினர். சமூக வாழ்வில் பங்கேற்கத் தொடங்கினர். அச்சுப்பொறி வளர்ச்சியினால், இதழியல் துறை வளர்ந்ததால், உலகச் செய்திகள் அனைத்தும் நான்கு சுவருக்குள் கொண்டு வந்து தந்தமையும், பெண்களின் அறிவுப் பெருக்கத்திற்கு வழிகோலியது. ஆண்களுக்கு இணையாக கல்வி வளர்ச்சியினைப் பெற்றனர். இவ்வகையில் மிகப் பெரிய மாற்றம் நிகழ்ந்தது. ஆனாலும் சமுதாயம், உளவியல் அடிப்படையில் பெண்களை இரண்டாம் இடத்திலேயே வைத்துள்ளது.

இவ்வரலாற்றுத் துன்பங்களுடன், கல்வியறிவினால் ஏற்பட்ட சமூகத் தொடர்புகளால் பெண்கள் புதிய துன்பங்களுக்கு ஆளாகி நிற்கின்றனர். உடன்கட்டை ஏறுவது சட்டத்தால் தவிர்க்கப் பட்டிருப்பினும், கைம்மை முறை தொடரவே செய்கிறது. சிறுவயதுத் திருமணங்கள் தடை செய்யப்பட்டிருப்பினும், இன்றைய சூழலில் வயது வந்த பெண்களுக்குத் திருமணம் நடப்பதும் கடினமாக இருக்கிறது. வரதட்சணைக் கொடுமை உச்சக்கட்ட நிலையில் உள்ளது. இதனால் பெண் சிசுக்கொலை, வழக்கத்தில் காணப்படுகிறது. இவற்றிற்கெல்லாம் மேலாகப் பணிக்குச் செல்லும் பெண் இன்று இரட்டைச் சுமைகளைத் தாங்க வேண்டிய நிலையில் உள்ளாள். குடும்பச் சுமை, அலுவல்சுமை இரண்டுக்கும் அப்பாற்பட்டு உளவியல் சுமையினையும் தாங்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளாள். ஆணைப் போன்று பொருள் திரட்டுகிறாள். எனினும் பெண்ணுக்குரிய மரபுப் பதிவினையும் காப்பாற்றியாக வேண்டிய நிலையிலும் இருக்கிறாள். இவ்விரட்டை நிலையின் அடிப்படையிலும், ஒட்டு மொத்தமான சிக்கல்களின் அடிப்படையிலும் பெண்களைப் பற்றிய பார்வையைச் செலுத்த வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. புதிய சூழலிலும், பெண்கள் பழமைப் பிடியினின்று முழுமையாக விடுதலை பெறாது போராட வேண்டியிருக்கும் நிலைமையினையும் எடுத்துக் காட்டுவது தேவையாகிறது.

**பெண் கல்வி**

ஓர் ஆண் மகனுக்குக் கற்பித்தால் ஒருவனுக்கு மட்டுமே கற்பிப்பதாகும். ஆனால் ஒரு பெண்ணுக்குக் கற்பித்தால் அவள் தொட்டு வழிவழியாக அக்குடும்பத்திற்கே கற்பித்ததற்கு ஒப்பாகும் என்பது எல்லாரும் அறிந்ததே. ஆண்களுக்குக் கல்வி என்பது இன்றியமையாததாகவும், பெண்களுக்குக் கல்வி என்பது மணத்திற்குரிய கூடுதல் தகுதியாகவும் கருதப்படுகிறது. பெண்களை அடிமைப்படுத்துவதற்காகக் கல்வியைத் தராமல் இருந்த நிலை மாறி

இன்று பெண் கல்வியைப் பலரும் ஏற்றுக் கொண்டுள்ளனர் தொடக்கப் பள்ளிகளில் சிறுமிகளின் எண்ணிக்கை அதிகமாக உள்ளன. மேலே செல்லச் செல்லக் கல்லூரிகளில், பல்கலைக் கழகங்களில் அவர்களின் பதிவு விழுக்காடு மிகவும் குறைந்து காணப்படுகின்றது. தற்காலத்தில் இவற்றில் சிறிது சிறிதாக வியத்தகு மாறுதல்கள் ஏற்பட்ட போதிலும் பெண்கள் திருமண வயதை எட்டியதுமே பெற்றோர்கள் அப்பெண்ணிற்குத் திருமணம் செய்து வைத்துவிட வேண்டும் என்று சமுதாயம் எதிர்பார்க்கின்றது. அவ்வாறு திருமணம் நடைபெற வில்லையெனில் பெண்களின் பெற்றோர்கள் பல வினாக்களுக்கும், பெண்கள் பல ஐயங்களுக்கும் இடமளித்தவர்களாகின்றனர். எனவே மற்றவர்களுக்குப் பயந்து திருமணம் செய்து வைக்கும் நோக்கில் பெண்களின் கல்விக்கும் வளர்ச்சிக்கும் தடையாகப் பெற்றோர்கள் இருக்கின்றனர். மேலும் பெண்களுக்குக் கணவன்தான் பாதுகாப்பு என்று உரிய வயதில் திருமணம் முடிப்பதைக் கடமையாக எண்ணி கல்விக்குத் தடை செய்கின்றனர். இன்னொரு வீட்டிற்குச் செல்லக்கூடிய பெண்ணிற்குப் படிப்பெதற்கு என்ற கண்ணோட்டத்திலும் பெண் கல்வி மறுக்கப்படுகின்றது.

'போன்சாய்ப் பெண்கள்' எனும் கதையில் தன் மகளுக்குக் கல்லூரிப் படிப்பு முடிந்தவுடன் திருமணத்தை நடத்த முற்படுகின்றான் முகுந்தன் - அவனுடைய மனைவி மேற்கொண்டு மகளைப் படிக்க வைக்க வேண்டும் என்கிறாள். இதனை ஏற்காத முகுந்தன் வழக்கறிஞரான சகுந்தலா மூலம் மனம் மாறுகிறான். திருமண வாழ்வில் பெண்கள் அனுபவிக்கும் கொடுமைகள்,இழப்புகள் என ஏராளமான வழக்குகள் தினமும் நீதிமன்றத்திற்கு வருவதைக் கண்டு “வானளாவி வளரச் கூடிய ஆலமரத்தின் ஆணிவேரை நறுக்கி, அதை போன்சாய் மரமாக மாற்றி அலங்காரப் பொருளாக்கி, வனங்களிலும், மலைகளிலும் வறட்சியான காலத்திலும் ஆழமான வேர்பரப்பி நீர் உறியும் பெருமரங்களை வளமான காலத்திலும் கூட குறுக்கி நறுக்கி அதன் வளர்ச்சியை நிறுத்தி அதன் போஷணைக்கு அது தன்னை வளர்ப்பவனையே சார்ந்திருக்கச் செய்வது போலத்தான் மகாலட்சுமியையும் ஆக்கிவிடப் போகிறோமோ” என்று அச்சம் கொண்டு மகளை மீண்டும் கல்லூரியில் சேர்க்க முடிவெடுக்கிறான் முகுந்தன் - திருமணம் என்ற சடங்கிற்காக பெண்ணின் கல்விக்குத் தடைவிதித்து அவளின் வளர்ச்சியை முடக்குவது தவறு; பெண்ணுக்குக் கல்வியே தனித்தியங்கும் ஆற்றலைக்

கொடுக்கவல்லது. எனவே பெண்ணுக்குக் கல்வி புகட்டுவது அவசியம் என்பது இக்கதையின் மூலம் வலியுறுத்தப்படுகிறது.

**பெண் சீண்டல்**

பெண் சமுதாயம் வீறு கொண்டதாய், தன்னம்பிக்கை கொண்டதாய் இருந்தாலும் ஆண்களால் பல்வேறு தொல்லைகளுக்கு ஆளாக வேண்டிய நிர்பந்தம் ஏற்பட்டு வருகிறது. 'நத்தைக் கூடுகள்' எனும் கதையில் மரபு வழிப்பட்ட முறையில் வளர்க்கப்பட்ட லதா குனிந்த தலை நிமிராதவள். பயந்த சுபாவம் கொண்டவள். தினமும் பணிக்குச் செல்கையில், பேருந்து நிறுத்தத்தில் ஆரம்பித்து, வேலைகளை முடித்து வீடு திரும்பும் வரை ஆண்களின் சீண்டல்களால் மன உளைச்சல்களுக்கு ஆளாகின்றாள். நாட்டில் விலங்குகள் கூடச் சுதந்திரமாக நடமாடுகின்றன. ஆனால் பெண்கள் மட்டும் அச்சத்துடன் ஒதுங்குவது ஏன்? என்ற வினா அவளை எண்ணிப் பார்க்கத் தூண்டுகிறது. அத்தூண்டலில் தாய் காலங்காலமாகக் கற்பித்தவை அவளின் நினைவுக்கு வருகின்றன. அவளுடைய கற்பும் அது நிலைநாட்டி நிரூபிக்கிற ஒழுக்கமும் மிக முக்கியமானவை என்ற தாயின் இந்தக் கற்பித்தல் உணர்வுதான் தன்னை அடிமை மனோபாவத்தின் ஆழத்திற்குக் கொண்டு செல்லக் காரணம் என்று லதா தெளிகிறாள். ஆண்களின் சீண்டல்களுக்குப் பதிலடி கொடுக்கிறாள். தன்னம்பிக்கை அடைகிறாள். இவளின் நடை, உடைகளில் ஏற்பட்ட மாற்றத்தை அம்மா கண்டிக்கிறாள். "அம்மா! இன்னிக்கு பெண்ணுக்குத் தேவை சுருண்டுக்கறதுக்கு ஒரு கூடு இல்லை. வெட்கமும், கூச்சமும் வச்சுகிட்டு கூட்டுக்குள்ளே புகுந்துக்கற நத்தையா அவள் வாழ வேண்டியதில்லை. இந்தக் கூட்டை ஒடைச்சு சிறகைப் பிரிச்சு வெளியே உள்ள பரபரப்பான உலகத்துக்கு ஈடுகொடுத்து வாழ அவளுக்குத் தேவையானது தைரியமும், பலமும், நம்பிக்கையும்தான்" என்கிறாள். பெண்ணுக்குரிய நடத்தைகளாக சமூகத்தால் கற்பிக்கப்பட்ட கூட்டுக்குள் நத்தையாய் இல்லாது இயல்பாய் விடுதலையை நோக்கி மன எழுச்சி கொண்டு மாறுதல் எய்தும் நிலையினை இக்கதை எடுத்துக்காட்டுகிறது.

தொல்காப்பியர் பெண்ணுக்குரிய இலக்கணத்தை,

> "அச்சமும் நாணும் மடனும் முந்துறுதல்
> நிச்சமும் பெண்பாற் குரிய என்ப" (நூற்.8)

என்று விளக்குவார். இதன்மூலம் நாணமும் கற்பும் அச்சமும் மடனும் பெண்களுக்கே உரிய குணங்களாகப் பழங்காலத் தமிழர் கொண்டிருந்தனர் என்பது புலனாகின்றன. பெண் பற்றிய புதிய இலக்கணத்தை, "மடம், நாணம், அச்சம், பயிர்ப்பு, கற்பு என்பவைகள்

ஆடவர்களுக்கும், பெண்களுக்கும் பொதுவாக உளதேயொழிய பெண்களுக்கு மட்டும் என்பது நியாயமல்ல" (பெரியார், குடியரசு 01-03-1936) என்று கூறும் பெரியாரின் சிந்தனை சிந்திக்கத்தக்கது. கற்பு என்பது ஆண்களுக்கும் உரியது. கற்பிழப்பு என்ற விபத்தில் பாதிக்கப்பட்ட பெண்ணைப் பழி தூற்றுவதை விடுத்துக் காரணமான ஆணைக் கடுமையாகத் தண்டிக்கும் நிலை வரவேண்டும். அந்நிலையை எய்தினால் மட்டுமே,

**"ஒருத்தியைக் கண்டால் ஒன்பது நாய்கள்**
**துரத்துவது தொலைவதுஎந் நாளோ?"**

(பாரதிதாசன், குயில்பாடல்கள், ப. 150)

என்ற வினாக்குறிகள் விரைவில் அகலும். ஆண் - பெண் சமத்துவமற்ற சமுதாய அமைப்பினையே இவை காட்டுகின்றன. ஆணும் பெண்ணும் சமம் என்ற கருத்தை மதிக்க வேண்டும். அப்பொழுதுதான் பெண்கள் இது போன்ற வன்கொடுமைகளிலிருந்து விடுபடுவர் என்பது தெளிவாகிறது.

## அலுவல் மகளிரின் சிக்கல்கள்

இறைவனுடைய படைப்பில் ஆண் என்றும், பெண் என்றும் இரு கூறுகள் இருக்கின்றன. படைப்பின் நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளவே இந்த வேறுபாடுகளும் அமைந்துள்ளன. பரிணாம வளர்ச்சியில் ஆணின் பாத்திரம் ஒருவிதமாகவும், பெண்ணின் பாத்திரம் இன்னொரு விதமாகவும் உருவாகியுள்ளது. ஆகவே, ஆண் மேற்கொள்ளுகின்ற பணியிலும், பெண் மேற்கொள்ளுகின்ற பணியிலும் வேறுபாடு இருப்பது தவிர்க்க முடியாதது. ஆனால் நவீன வாழ்க்கையில் தேவைகள் பெருகிக் கொண்டே போகின்றன. தொழில் நுட்பம், எந்த நூற்றாண்டையும்விட இந்த நூற்றாண்டில் துரித வளர்ச்சியைப் பெற்று வருகிறது. இந்த வேகத்துக்கு ஈடு கொடுக்கும் விதத்தில் மனித உழைப்பும் தேவையாக இருக்கிறது. ஆகவே ஆண், பெண் என்கிற பேதம் இன்றி அனைவரும் ஏதோ ஒரு பணியில் தங்களை ஈடுபடுத்திக் கொள்ளுவது அவசியமாக இருக்கிறது.

வசதிகள் பெருகிவிட்ட இந்தக் காலத்தில் வீட்டுப் பராமரிப்பு மட்டுமே பெண்களுக்குப் போதுமானது என்றும் சொல்லிவிட முடியாது. அவர்களும் சமுதாய வளர்ச்சிப் பணிகளில் ஈடுபாடு காட்டுவது இயற்கை திறமை என்று வருகின்றபோது ஆண்களின் திறமை உயர்வானது என்றோ, பெண்களின் திறமை தாழ்வானது என்றோ சொல்லுவதற்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை. தங்கள் திறமையினைப் பல்வேறு துறைகளில் வெளிப்படுத்துவதற்குப்

பெண்கள் ஆசைப்பட்டால், அதற்கு எவரும் தடை போடவும் முடியாது. ஆக எல்லாத் துறைகளிலும் பெண்கள் ஈடுபாடு காட்டத் தொடங்கி இருப்பது இருபத்தோராம் நூற்றாண்டில் ஏற்பட்டுள்ள திருப்பங்களில் ஒன்றாகும். ஒரு பெண் வேலைக்குச் செல்லுகின்ற போது, அவள் எத்தனையோ விதமான சிக்கல்களைக் குடும்பத்திற்கு உள்ளேயும், குடும்பத்திற்கு வெளியேயும் சந்திக்க வேண்டியவளாக இருக்கிறாள். அப்படி அவள் சந்திக்கின்ற சிக்கல்கள் ஒரு ஆணினுடைய சிக்கல்களுக்கு முற்றிலும் மாறுபட்டு இருப்பதைக் காணலாம். அவ்வாறு வேலைக்குச் செல்லும் தலங்களில் பெண்கள் சந்திக்கின்ற சிக்கல்கள் சிறுகதைகளின் வழி ஆராயப்படுகின்றது.

**சுயமதிப்புப் பெறல்**

குடும்பம் என்று அமைகின்றபோது, தேவைகருதித் தங்கள் மனைவியை வேலை பார்க்க அனுமதிக்கின்ற ஆண்களும்கூட சந்தேகக் கண்கொண்டு அவர்களைப் பார்ப்பதும், அவர்களின் உரிமைகளுக்குத் தடைவிதிப்பதும், அவர்களுடைய நடமாட்டங்களைக் கட்டுப் படுத்துவதும் வழக்கமாகிவிட்டன. ஆண்கள் பெண்களின் முன்னேற்றத்தை விரும்பாமல், வீட்டிற்கு மொட்டைக் கடிதம் எழுதுவது, தவறாக வேறு ஆணுடன் இணைத்துப் பேசுவது போன்ற தகாத செயல்களில் ஈடுபடுகின்றனர். அதனால் பெண்கள் வேலைக்குச் செல்வதில் சிக்கல் ஏற்படுகிறது. இந்தியச் சமுதாயத்தைப் பொறுத்தவரையில், பரம்பரையாகத் தொடரும் சம்பிரதாயங்களும், பழக்க வழக்கங்களும் வேலை பார்க்கும் பெண்களுடைய சிக்கல்களை மேலும் சிக்கலாக்கி விடுகின்றன.

‘பிரம்மாஸ்திரம்’ எனும் கதையில் வரும் ஆர்த்தி அலுவலகத்தில் வேலை பார்த்து வருகிறாள். ஆர்த்தியின் திறமைக்காக மேலாளர் பதவி உயர்வு அளிக்கிறார். அதனை விரும்பாத பிற ஆண்கள் மேலாளருடன் ஆர்த்தியை இணைத்துப் பேசி அவளின் கணவனுக்கு மொட்டைக் கடிதம் அனுப்புகின்றனர். குழப்பம் அடைந்த கணவன், தன் மனைவியிடம் வேலைக்குப் போக வேண்டாம் என்று கூறி சண்டையிடுகிறான். கணவனே முன்னேற்றத்தைத் தடுக்கும் ஏவுகணையாக வந்துள்ளதை உணர்ந்த அவள், “தீக்குளிக்கச் சொல்லியும், வண்ணான் பேச்சைக் கேட்டு கர்ப்பிணியைக் காட்டுக்கனுப்பியும் நீங்கள் சுலபமா இராமனாயிடலாம். ஆனா சீதையாக நான் தயாரில்லை” என்று கூறுகிறாள். கணவனின் பேச்சு நியாயமற்றது என்பது தெரிந்தும் அவன் கணவன் என்பதற்காக வேலையை விடுவது 19ஆம் நூற்றாண்டுப் பெண்களிடம் எதிர்பார்த்திருக்கலாம். ஆனால் சிந்திக்கும் ஆற்றல் கொண்ட ஆர்த்தி, காலத்திற்குப் பொருந்தாத நடத்தைகளை

றுவதற்குத் துணிந்து கணவனைப் பார்த்து, "புருஷன்கற மொறையில ங்களுக்கு என் வாழ்க்கையைப் பத்திப் பேச, பகிர்ந்துக்க எல்லா ரிமையும் தர்றேன். ஆனா, என்னை அழிக்க நெனைக்கற எதிரி எய்ற ரம்மாஸ்திரமாக நீங்கள் வந்தீங்கன்னா என்னைக் காப்பாத்திக்க விலகிக்கத் தானே வேணும்" என்று கூறியதும் கணவன் மறுப்பேதும் சொல்லாமல் அமைதியாக இருக்கிறான். இக்காலப் பெண்கள் சராசரிப் பெண்களைப்போல் இல்லாமல் புதிய காலப் பின்னணியில் சிந்திக்கும் ஆற்றலும், தன்னம்பிக்கையும் பெற்றவர்களாகத் திகழ்கின்றனர் சுயகௌரவத்துடன் வாழ முனைகின்றனர். காலங்காலமாக 'பிறரைச் சார்ந்து வாழ்தல்' எனும் பெண்களின் நிலை நவீன காலத்தில் மாறியுள்ளமை இக்கதையின் மூலம் தெளிவாகிறது.

இன்றைக்கு மத்திய வர்க்கக் குடும்பங்கள் பெரும்பாலானவற்றில் கணவன், மனைவி ஆகிய இருவருமே வேலை பார்க்கின்றவர்களாகத் தான் இருக்கின்றார்கள். இப்படி இருவரும் வேலை பார்க்கின்ற குடும்பங்களில் பொருளாதாரச் சிக்கல்கள் ஓர் அளவிற்குச் சமாளிக்கப்பட்டிருப்பது உண்மையாயினும் வேறு பல சிக்கல்கள் தோன்றியுள்ளதை மறுப்பதற்கு இல்லை. இவற்றை விளக்கும் விதமாக 'இனியும் கதை தொடரும்' எனும் கதை அமைந்துள்ளது. யோகேஸ்வரன் சிறுபத்திரிகைகளை இலட்சிய வேகத்துடன் நடத்த, அது பொருளாதார நெருக்கடியினால் முடங்கிப்போகிறது. வீட்டு வாடகை கொடுக்காததால் வீட்டைக் காலி செய்து தரும்படி உரிமையாளர் சண்டையிட்டுச் செல்கிறார். யோகேஸ்வரனின் மனைவி யுவராணி தனியார் தொலைக்காட்சி நிலையத்திற்கு வேலைக்குச் செல்ல முடிவு செய்கிறாள். இதில் அவனுக்கு உடன்பாடு இல்லை. விவாதம் ஏற்படுகிறது. "என்ன பண்றது, நம்ப இலட்சியங்களை வீட்டு வாடகையாகவும், மளிகையாகவும் கொடுக்க முடியலியே. உயிர்வசிக்கிற இடமாக உடம்பிருக்கிறவரை அதைப் பராமரிக்க வருமானமும் அதுக்காக ஒரு வேலையும் தேட வேண்டியதாயிருக்குதே" (தி. க.,தொ-2, ப. 721) என எண்ணுகிறாள். வேலைக்குச் சென்ற முதல் நாள் அனுபவமே அவளுக்குக் கசப்பைத் தருகிறது. அங்கு ஆண்கள் நாகரிகம் என்ற பெயரில் தொட்டுப் பேசுவதும், அநாகரிகமாக நடப்பதும் இவளை வேதனைப்படுத்துகிறது. வீட்டின் நிலையை மனதிற்கொண்டு எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்கிறாள். வீட்டிற்குத் தாமதமாகச் செல்கிறாள். வீட்டில் கணவன் சமையல் வேலைகளை முடித்து இவளுக்காகக் காத்துக்கொண்டிருந்தது இவளுக்குள் ஒரு குற்ற உணர்வை ஏற்படுத்துகிறது.

இக்கதையின் மூலம் இல்லத்தரசியாக இருந்த பெண்கள் பணியின் பொருட்டு வெளி உலகிற்கு வரும்பொழுது, அதுவரை அவள்

சந்திக்காத சில சிக்கல்களைச் சந்திக்க நேரிடுகிறது என்றும் பொருளாதார சிக்கலின் காரணமாக இவை போன்ற இடர்களைப் பொறுத்துப்போக வேண்டியுள்ளது என்றும் எடுத்துக்காட்டப் பட்டுள்ளது. மேலும் படித்துப் பட்டம்பெற்றுப் பணிக்குச் செல்லும் பெண்கள், பணிக்குச்செல்லாத பெண்கள் மரபின் அடிப்படையில் குடும்பத்தை எப்படிக் கவனித்துக்கொள்கிறார்களோ அப்படியே கவனிக்க வேண்டிய நிலையில் இருக்கின்றனர். இச்சூழ்நிலை பணிக்குச் செல்லும் பெரும்பாலான பெண்களுக்கு மனநெருக்கடியை ஏற்படுத்திவிடுகிறது. குடும்பச்சுமை, அலுவல்சுமை இரண்டுக்கும் அப்பாற்பட்டு உளவியல் சுமையினையும் தாங்க வேண்டிய கட்டாயத்தில் இப்பெண்கள் நிறுத்தப்பட்டுள்ளனர். பரம்பரையாகச் சுட்டப்பட்டு வரும் பண்பாட்டு அடையாளம் தன்னைவிட்டு நீங்கிவிடக் கூடாது என்பதற்காக கூடுதல் எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டிய நிலை இவர்களுக்குச் சேர்ந்திருக்கிறது என்பது புலனாகிறது.

**இருவேறு நீதி**

பெண்களுக்கு ஏற்படும் கொடுமைகளுக்கு ஆண்கள் அடிப்படைக் காரணமாகி விடுகின்றனர். மகளிரைக்காட்டிலும் ஆடவரே உயர்ந்தவர்கள் என்று கற்பித்து ஆடவருக்கு ஒரு நீதி மகளிருக்கு ஒரு நீதி என்று இச்சமுதாயம் எல்லா நிலைகளிலும் ஏற்றத்தாழ்வை ஏற்படுத்திவிட்டது எனலாம். ‘கத்திரிக்ககாய் பட்டிணம்’ எனும் கதையில் விவாகரத்தான பார்வதி தன் மகளின் எதிர்காலத்தை மனதிற்கொண்டு வேலைக்குச் செல்கிறாள். அலுவலகத்தில் அவள்மேசை மீதிருக்கும் தொலைபேசியில் ஆடவன் ஒருவன் பெண்ணின் உடலையும், உறவையும் வசைப்படுத்தும் சாக்கடை வார்த்தைகளால் பேசுவதை வழக்கமாகக் கொள்கிறான். தொலைபேசி நிலையத்தின் உதவியால், உடன்பணி புரியும் மூர்த்திதான் இச்செயலைச் செய்தது என்று கண்டுபிடிக்கிறான். அலுவலகத்தில் புகார் கொடுக்கிறாள். ஆனால் மேலதிகாரியோ சிக்கல் தீர இவளை வனாந்தரக் காட்டிற்குப் பதவி மாற்றம் செய்கின்றார். அங்கு செல்ல விருப்பமின்றிச் சாதிச் சங்கங்களை அணுகுகிறாள். அவர்களும், “நல்லவளா இருக்கிறவகிட்ட தப்பா நடந்துக்கவோ, தப்பா பேசவோ அடுத்தவனுக்கு தைரியம் வராது. அப்படியில்லாம ஒருத்திகிட்டே ஒருத்தன் தப்பா நடந்துக்கறான்னா அவ நல்லவளா இருக்க மாட்டா” என்று இவள் மீதே குற்றம் சுமத்துகின்றனர். தவறு செய்தவன் ஆதரவையும், அனுதாபத்தையும் பெறப்போக பார்வதிக்கே தண்டனை வழங்கப்படுகிறது. இறுதியில் வழக்கறிஞரும், சமூக சேவகியுமான துளசியின் உதவியுடன் மாறுதல் ஆணை இரத்து செய்யப்படுகிறது.

இக்கதையின் மூலம் தவறு செய்த ஆணை இச்சமுதாயம் குற்றம் சாட்டுவதில்லை. எவ்விதத் தவறும் செய்யாத பெண்ணின் ஒழுக்கத்திலேயே குற்றம் சாட்டுகிறது என்பது எடுத்துக்காட்டப்பட்டுள்ளது. சமத்துவமற்ற சமுதாய அமைப்பே இதற்கு அடிப்படைக் காரணமாக இருப்பதை அறிய முடிகிறது. மேலும் பெண்கள் சிக்கல்களை எதிர்த்துப் போராடினால் வெற்றிகிட்டும் என்பதும் உணர்த்தப் படுகிறது.

**மனைவியின் தனித்தன்மை போற்றப்படாமை**

சு. வேங்கடராமன் தம் நூலில், "இன்றைய சூழலில் மத்தியதர, உயர் மத்தியதர வாழ்க்கையில் கல்வி கற்று, அலுவல் பார்த்து பொருளீட்டும் பெண்ணுக்கு மணமாகி, குடும்ப வாழ்வில் மனைவி என்ற பங்கு நிலையை ஏற்றபின், அவளுக்குத் தனித்தன்மை, தனிப்பட்ட ரசனை, படைப்பாற்றல், விருப்பு - வெறுப்பு என்பன ஏதும் இருக்கக் கூடாது. இருப்பினும் குடும்ப வாழ்விற்காக அவள் அதையெல்லாம் மறந்து மூட்டைக்கட்டிப் பரணியில் போட்டுவிட வேண்டும். உக்கிரமான அறையில் (சமையலறையில்) அவள் இருப்பதுதான் அவளுடைய இயக்கத்திற்கு மைய அச்சாக அமையும்... என்பதாக ஆணாதிக்க சமூகம் அவளைக் கட்டிற்குள் வைத்திருக்கிறது" (எண்பதுகளில் தமிழ்ப் புனைகதைகளில் பெண்ணியம், ப. 67). அதாவது மணத்திற்குப் பின்பு, ஒரு பெண்ணிடம் உள்ள தனித்தன்மைகள் கணவனால் போற்றப்படுவதில்லை என்பதை அறிய இயலுகிறது. 'அக்கரை' எனும் கதையில், மங்கையர்க்கரசியின் ஓவியத்திறனைப் பாராட்டிப் பேசும்போதெல்லாம், அவளின் கணவன் மட்டம்தட்டிப் பேசுகிறான். தனக்கு இணையாகக் கலை இரசனை இல்லாத தன் மனைவி பற்றி அருள் கூறி வருந்துகிறான். அதற்கு மங்கையர்க்கரசியின் கணவன், "குடுத்து வச்சவங்க சார் நீங்க. ஒரு மனுஷனுக்கு இதைவிட நல்ல மாதிரியான வாழ்க்கை அமையவே முடியாது. தான் உண்டு தன் வேலை உண்டுன்னு வாழற மனுஷி, அடுப்பும், குழந்தையுமே, வீடும் உலகமும்னு வாழற மனுஷி, அடடா புண்ணியம் பண்ணினவர் சார் நீங்க..." என்று கூறுகிறான்.

ஒரே துறையில் ஈடுபட்டிருக்கும் கணவன் மனைவியரிடையே போட்டி மனப்பான்மை ஏற்பட்டுவிடுகிறது. வாழ்வில் சக தோழியாய் இணைந்திருக்கிற பெண்ணிடம் என்ன திறமை இருக்கிறது, அதை எப்படிப் பெருமைக்குரிய விஷயமாகப் போற்றுவதென்றெல்லாம் சிந்திக்காமல் தன்னைவிட எந்தச் செயலிலும் மனைவி உயர்ந்து விடக் கூடாதென்று எண்ணுகின்றனர். அவ்வாறு மனைவி தனித்திறமையுடன் இருப்பதைச் சகித்துக்கொள்ளும் மனமின்றிப் பிறர் முன்னிலையில்

தாழ்த்திப் பேசுதல், ஒவ்வொரு செயலையும் கீழ்மைப்படுத்திப் பேசுதல் போன்ற செயல்களில் ஈடுபடுகின்றனர். பெண்ணானவள் கணவனுக்குக் கீழ்ப்பணிந்து குடும்பமே உலகமென வாழ வேண்டும் என்று ஆணினம் எதிர்பார்ப்பதை இக்கதைச் சுட்டிக் காட்டுகிறது.

**மனைவியின் கடமைகளில் கணவன் பங்கேற்றல்**

பழைய சமூகத்தின் மதிப்புப்படி மனைவி என்பவள் கணவனுக்குரிய உடமைகளில் ஒன்று. கணவனுக்குரிய போகப்பொருள், கணவனை மகிழ்ச்சிப்படுத்துவதும் அவனுக்குப் பணிவிடைகள் செய்வதும் அவளுடைய கடமைகளாகும். கணவன் என்ற ஓர் ஆணுடன் மனைவி என்ற பெண் கொள்ளுகின்ற இயல்பான இச்சைகளுக்கோ நட்புக்கோ இடம் இருக்காது. நவீன காலத்தில் ஆண்- பெண் சம உணர்வு நிலையில் மனைவிக்குரிய கடமைகளும் மாறுதலுக்குள்ளாகி உள்ளன. 'தழும்பு' எனும் கதையில் ரவி, கற்பகம் இருவரும் புதுமணத் தம்பதியர், ரவி மனைவியை மதிக்கத் தெரிந்தவன். கற்பகம் பழமை மரபுகளில் ஊறியவள். ஒருநாள் ரவி அலுவலகத்தில் இருந்து வீடு திரும்பியவேளை, கற்பகம் கணவன் வந்தது தெரியாமல் புத்தகத்தைப் படித்துக் கொண்டிருக்கின்றாள். தன் தவற்றை எண்ணிப் பதறுகிறாள். அவனிடம் மன்னிப்புக் கேட்கின்றாள். இது ஒன்றும் தவறு இல்லை என்று ரவி கூறியும் அவளால் அதை ஏற்க இயலவில்லை. இதனால் ரவி வேதனை அடைகின்றான். "மனைவி என்பவள் கணவனைக் கண்டதும் பரபரப்பவள். எஜமானின் முன்னால் கைகட்டி நிற்கும் அடிமை. ஆள்பவன் முன்னால் பணிவும் பவ்யமுமாக நிற்கிற சேவகன். ரொட்டியை வீசுகின்ற முதலாளியின் முன்னால் வால்குழைக்கும் நாய். இந்த எண்ணங்கள்தான் இவளுடைய மனத்தின் அடியிலும் ஊறி, இரத்தத்தில் கலந்து போயிருக்கிறதா? தாத்தாவோ, அப்பாவோ, அம்மாவோ, அண்ணாவோ ஆட்சி செலுத்தி அசர வைத்தது அவள் அடிமனத்தில் இன்னமும் நிறைந்து போயிருக்கிறதா? கணவன் என்பவன் சிநேகிதன், தோழன், வாழ்வென்னும் பயணத்தில் நடைபோடும் இணை, உன்னை நசுக்காதவன், உனது ரசனைகளைப் பொசுக்காதவன். உன் சந்தோசங்களைக் கலைக்காதவன். இதையெல்லாம் இவள் புரிந்து கொள்ளவில்லையா?" என்று எண்ணி வருந்துகின்றான். அனைத்திலும் மனைவிக்குச் சம உரிமை கொடுக்கிறான். அவளும் இவனைப் புரிந்துகொள்கிறாள். இக்கதையில் பெண் விடுதலைச் சிந்தனை வலியுறுத்தப்படுகிறது. ஆண் ஆதிக்கச் சமூகத்தில் ஒவ்வோர் ஆண் மகனும் மனைவி தன்னிடம் மதிப்பும் மரியாதையும் நிறைந்தவளாக விளங்க வேண்டும் என்று எதிர்ப்பார்ப்பான். நவீன காலத்தில் மனைவியும் தனக்குச் சமமாக உரிமையும் சமத்துவமும்

பெற்று விளங்க வேண்டும் என்று எண்ணி உரிமை வழங்கும் ஆண்களின் மனமாறுபாடு எடுத்துக்காட்டப்படுகிறது.

மேற்கண்ட சிறுகதைகளின் வாயிலாகப் பெண் கல்வியைத் தொடர்வதும், நிறுத்துவதும் கல்யாணச் சந்தையிலே நிர்ணயிக்கப் படுவது வெளிப்படுகிறது. வீட்டைவிட்டு வெளியுலகில் பங்கேற்ற பெண்களை ஆண்கள் சீண்டுவதால் பெண் போகப் பொருளாக நோக்கப்படுகிறாள். இதனால் உயிரிழப்பு போன்ற தீமைகள் ஏற்படுகின்றன. பெண்கள் இத்தகைய செயல்களை எதிர்க்கும் துணிவு பெற வேண்டும் என்பது வலியுறுத்தப்படுகிறது. மேலும் காலங்கள் மாறும்போது, புதிய தலைமுறையினரால் பழைய மதிப்புகள் மாற்றப்படுவதையும், புதிய சிந்தனைகள் இடம் பெறுவதையும் அறிய முடிகின்றது. கணவன் மனைவி உறவில் ஆணின் ஆதிக்க உணர்வு குடும்பத்தில் பெரும் சிக்கலை ஏற்படுத்துகிறது. ஆண், எப்படித் தனித் தன்மை மிக்கவனாகக் கருதப்படுகிறானோ அதுபோலவே பெண்ணும் நடத்தப்பட வேண்டும் என்ற கருத்தைக் கதைகள் முன் வைக்கின்றன.

❖❖❖